**நலன்புரிகள் நலன்கள் சபை - 2021**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நலன்புரிகள் நலன்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 227,121 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 713,250 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 486,129 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனங்கள் குறைவடைந்தமையே இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமூகப் பதிவு தகவல் முறைமையின் (SRIS) நம்பகத்தன்மையை | நலன்புரிகள் நலன்கள் சபை (WBB) SRIS இல் Sever மற்றும் Client செயற்பாடுகள் இரண்டிற்கும் அனர்த்த மீட்பு முகாமைத்துவ முறைமையை | நலன்புரிகள் நலன்கள் சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு விசேட கவனம் |

வலுப்படுத்துதல், SRIS ஐ நிறுவுதல், தேவையான சனத்தொகை தரவு, தரவுகளின் சரிபார்ப்பு நடைமுறைகள், postgreSQL தரவுத்தளங்களுக்கான cross - platform client, IT கொள்கைகளை அமுல்ப்படுத்துதல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுதல், நிறுவன கட்டமைப்புக்களை வலுப்படுத்துதல், SRIS இன் அன்றாட நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுதல், பயனுள்ள தொடர்பாடல், அலுவலக சுற்றாடலை திட்டமிட்டு மேம்படுத்துதல், SRIS இலிருந்து ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமைகளுக்கு (IWMS) நகருதல், IWMS ஐ இறுதியாக்குதல் மற்றும் IWMS இன் கண்காணிப்பு முறைமைகளை நிறுவுதல் போன்ற மூலோபாயங்களை நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அந்த மூலோபாயங்கள் திட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

உருவாக்குவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போது, SRIS உருவாக்குபவருடன் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு உடன்படிக்கையின் கீழ் உள்ளதுடன் காலவரிசைக்கு ஏற்ப அறிவுப் பரிமாற்றம் இடம்பெறும்.

உருவாக்கப்பட்ட மொபைல் பயன்பாட்டின் அடிப்படையில், ஆரம்ப் தரவு சேகரிப்பு மற்றும் சரிபார்ப்பு நிகழ்ச்சித்திட்டம் இன்னும் செயற்படுத்தப்படுகிறது. நுவரகம்பலத கிழக்கு மற்றும் மடு பிரதேச செயலக பிரிவில் (DSD) ஏற்கனவே தரவு சேகரிப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், ஹப்புத்தளை DSD செயன்முறையில் உள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் செயன்முறைக்காக மாதிரிகள் ஏற்கனவே தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது, WBB இன் தொகுப்பில் ஒரு பெரிய கட்டமைப்பு வாய்ப்பொன்று உள்ளது. இந்த செயன்முறை பூர்த்தியடைந்ததும், தலைவர் நியமிக்கப்பட்டு, அதற்கேற்ப ஏனைய வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும். ஆட்சேர்ப்பு மட்டுமின்றி ஏனைய நடைமுறை தீர்மானங்களும் உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் எடுக்கப்படும். WBB இன் இருப்பிடத்தை ”மெஹேவர பியச” இற்கு மாற்றுதல் உயர் அதிகாரிகளால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

IWMS அபிவிருத்திகளின் செயன்முறைக்கான பெறுகை செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயற்திட்ட சமூக பாதுகாப்பு வலைகள் செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| | செயற்திட்டம் (SSNP) எட்டு மாதங்களுக்குள் இந்த IWMS ஐ கையளிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. அதன் பிரகாரம் மீதமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட 17 பதவியணியினருடன் ஒப்பிடும் போது உள்ளபடியான பதவியணியினர் 09 ஆக காணப்பட்டது, ஆகையால் 08 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அனைத்து ஊழியர்களும் பதிற்கடமை, பணிக்கமர்த்தல் மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். சபை 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட போதிலும் சபை 2021 திசெம்பர் 31 வரையிலும் சரியான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரிப்பதற்கு தவறியிருந்தது. | 2019 நவம்பர் முதல் சபைக்கான தலைவர் மற்றும் ஏனைய ஆணையாளர்களின் நியமனங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்மானத்தை எடுத்திருக்கவில்லை. பணிப்பாளர் சபை உட்பட தலைவர் ஒருவர் இல்லாமல் ஏனைய வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்வது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. இதன் காரணமாக, பதிற்கடமை மற்றும் பணிக்கமர்த்தல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் சபை அதனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.<br><br>சபையின் அமைப்பு/ கட்டமைப்பு மறுசீரமைப்பு ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. செயன்முறை பூர்த்தியடைந்ததும், தலைவர் நியமனம் செய்யப்படுவார். மேலும் அதற்கேற்ப தேவையான ஏனைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். | உரிய உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |